SC.No. 138/2018
PW – 2
28.01.2025
பெயர் : சித்திரைக்கண்ணன்
த/பெ. : சின்னப்பன்

**<u>மனு அனுமதிக்கப்பட்டதன்பேரில் சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

சைக்களை வாடகைக்கு எடுக்க வேண்டுமென்றால் அது குறித்து அதற்கான நோட்டில் பதிவு செய்வார்கள். அந்த புத்தகத்தில் சைக்கறின் விவரம் குறித்தும் வாடகை நேரம் குறித்தும் எழுதுவார்கள். சம்பவத்தன்று நான் வந்த சைக்களை போலிசார் பார்க்கவில்லை. மறுநாள் காலையில் பார்த்தார்கள். அப்போது நான் அங்கு இருந்தேன். இரவு அந்த சைக்களை நான் எங்கே போட்டேனோ அங்கு தான் கிடந்தது. சைக்கிள் கிடந்த இடத்தில் தான் சம்பவம் நடைபெற்றது என்று சொன்னால் சரிதான். சைக்கிளில் ரத்தம் படவில்லை. நான் அங்கு நின்று கொண்டிருந்தது குறித்து சைக்கிள் கிடந்தது குறித்தும் எதிரிகளின் வீடு மற்றும் சைக்கிளுக்கு இடையே இருந்த தூரம் குறித்தும் போலிசார் விசாரித்து எழுதிக்கொண்டார்கள். அதற்காக போலிசார் மாதிரி வரைபடம் வரைந்தார்கள். அப்போது காலை 9 மணி இருக்கும். அப்போது சிதம்பர வாத்தியார் மட்டும் அந்த இடத்தில் இருந்தார். அந்த சமயத்தில் என்னிடம் போலீசார் என்னிடம் கையெழுத்து வாங்கவில்லை. அதன்பிறகு தான் போலீசார் கையெழுத்து வாங்கினார்கள். நான் மருத்துவமனைக்கு சென்றேன்.என்னுடைய வீட்டிலிருந்து காவல் நிலையம் சுமார் ½ கிலோ மீட்டர் தூரம் உள்ளது. காவல் நிலையத்தை கடந்துதான் மருத்துவமனைக்கு செல்ல வேண்டும். மருத்துவமனைக்கும் காவல்நிலையத்திற்கும் இடையே சுமார் ½ கிலோ மீட்டர் தூரம் இருக்கும். மருத்துவமனைக்கு செல்லும் வழியில் நடந்த சம்பவம் குறித்து நான் புகார் கொடுக்க முயற்சித்துள்ளேன். மருத்துவமனையில் காயம்பட்ட நபர்களை அனுமதித்த பின்பு நான் புகார் கொடுத்தேன். நான் சொல்ல சொல்ல புகார் வாக்குமூலத்தை எழுதி என்னிடம் கையெழுத்து வாங்கினர். அதன் பிறகு மருத்துவமனைக்கு சென்று போலிசார் காயம்பட்டவர்களை விசாரித்தார்கள். காயம்பட்ட விதம் குறித்தும் காயம்பட்டவருக்கு என்னுடைய உறவுமுறை குறித்தும் மருத்துவர் விசாரித்து எழுதி கொண்டார். எனக்கு வேலை செய்வதற்கான நேரம் உண்டு. வரவுசெலவு கணக்குகளை நான் அன்றாடம் உரிமையாளரிடம் ஒப்படைத்துவிட்டு

செல்லவேண்டும் என்று சொன்னால் சரிதான். பில் ரசீதுகளுக்குரிய சாவி என்னிடம் கிடையாது. இரவு 8.00 மணியளவில் நான் வேலை முடித்து வந்துவிடுவேன். வேலைவிட்டு வந்த நேரத்தை போலிசார் என்னிடம் விசாரிக்கவில்லை. போலிசார் என்னை விசாரிக்கும்போது 108 ஆம்புலன்சில் சிகிச்சைக்கு சென்ற விவரத்தினை கூறினேன். 108 ஆம்புலன்சில் உள்ள மருத்துவ டெக்னிசியன்கள் காயம்பற்றிய விவரத்தினை கேட்டுக்கொண்டனர். நாங்கள் குடியிருந்த வீடு எனது தகப்பனாருக்கு பாத்தியப்பட்டது என்று சொன்னால் சரிதான். அந்த வீடு சுந்தரம் மற்றும் எனது தகப்பனார் பெயரில் உள்ளது. அந்த வீடு சுந்தரம் பெயரில் மட்டும் இருந்து வருகிறது என்று சொன்னால் சரியல்ல. அந்த வீடு சம்மந்தமாக சாட்சி செல்வத்திற்கும் எனக்கும் இடையே பிரச்சனை இருந்து வந்தது என்று சொன்னால் சரியல்ல. மேற்படி வீடு சம்மந்தமாகதான் எனக்கும், செல்வம் மற்றும் அவருடைய பெற்றோருக்கும் இடையில் பிரச்சனை இருந்து வந்தது என்று சொன்னாலும், அதை மறைக்கிறேன் என்று சொன்னாலும் சரியல்ல. சிதம்பரம் வாத்தியாரின் தூண்டுதலின் பேரில் எதிரிகளின் மீது இந்த பொய் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னாலும், எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் என்று சொன்னாலும் சரியல்ல. சம்பவயிடத்தில் இரத்தகறை இருந்தது குறித்து போலிசார் பார்வையிட்டார்கள். அதை போலிசார் கைப்பற்றினார்கள். என்னுடைய வீட்டு வாசலில் மட்டும் இரத்தகறை இருந்தது. அரிவாள் குறித்த அடையாளங்களை போலிசார் விசாரணையின் போது நான் கூறினேன். ஏற்கனவே கொடுத்த புகார் மறைக்கப்பட்டு அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலம் பின்னிட்டு வழக்கிற்காக உருவாக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

Sd/—சித்திரைக்கண்ணன்

சாட்சி சொன்னபடி என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்து பெறப்பட்டது.

Sd/— திரு.K.S.பால்பாண்டியன்,
தலைமை நீதித்துறை நடுவர்,
புதுக்கோட்டை.